## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No. I, PUDUKKOTTAI.

**CC .No. 145/2022 – அ.சா. 3 (சுதாகர் த/பெ. பாலகிருஷ்ணன்) குறுக்கு விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். எதிரி ஆஜர்.** நாள்: 04.08.2025.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. புகார்தாரர் ராமையா மற்றும் விபத்தில் இறந்து போன நபர் எனது உறவினர்கள் என்றால் சரியல்ல. எனது ஊரை சேர்ந்தவர்கள் ஆவார்கள். எனது ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் இந்த வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். விபத்தில் இறந்த நபரின் குடும்பத்தினர் மற்றும் புகார்தாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும், சம்பவத்தை கேள்விபட்டு போய் பார்த்தேன் என்றால் சரிதான்.

2. விபத்து நடந்த தேதி எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. நானும், ரவியும் சம்பவம் பற்றி கேள்விபட்டு மருத்துவமனை சென்று பார்த்தோம் என்றால் சரிதான். போலீசார் எங்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/– சி.பாரதி)
நீதித்துறை நடுவர் எண் –1 ,
புதுக்கோட்டை.

# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No. I, PUDUKKOTTAI.

**CC .No. 145/2022 – அ.சா. 2 (ரவி த/பெ. ராமன்) குறுக்கு விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். எதிரி ஆஜர்.** நாள்: 04.08.2025.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் எந்த வழக்கிற்காக சாட்சியம் அளிக்க நீதிமன்றம் வந்துள்ளேன் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புகார்தாரர் ராமையா மற்றும் விபத்தில் இறந்து போன நபர் எனது உறவினர்கள் என்றால் சரிதான். விபத்தில் இறந்த நபரின் குடும்பத்தினர் மற்றும் புகார்தாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும், சம்பவத்தை கேள்விபட்டு போய் பார்த்தேன் என்றால் சரிதான்.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/– சி.பாரதி)
நீதித்துறை நடுவர் எண் –1 ,
புதுக்கோட்டை.